தினமணி

# கரும்பு விலை நிர்ணய விவகாரம்: அமைச்சர் மீது உரிமை மீறல் பிரச்னை- பேரவைத் தலைவரின் முடிவு தள்ளிவைப்பு

First Published : 22 Apr 2010 05:24:49 AM IST



சென்னை, ஏப். 21: வேளாண் துறை அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகம் மீது அதிமுக கொடுத்துள்ள உரிமை மீறல் பிரச்னை குறித்த தனது முடிவை பின்னர் அறிவிப்பதாக பேரவைத் தலைவர் ஆவுடையப்பன் புதன்கிழமை தெரிவித்தார்.

கரும்பு விலை நிர்ணயம் தொடர்பாக, பேரவையில் பேசிய வேளாண் துறை அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகம், அதிமுக ஆட்சிக் காலத்தில் ஒரு பைசா கூட கரும்புக்கு விலை உயர்த்தப்படவில்லை என்று தெரிவித்தார். இதற்கு, அதிமுகவினர் கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர். பேரவையில் அமைச்சர் தவறான தகவலைத் தெரிவித்துள்ளார் என புகார் கூறினர். இதுகுறித்து, அமைச்சர் மீது உரிமை மீறல் பிரச்னை கொண்டு வரவேண்டும் என கோரிக்கை விடுத்தனர்.

இந்த நிலையில், கரும்பு விலை நிர்ணயம் தொடர்பாக இருதரப்பின் கருத்துகளையும் பேரவைத் தலைவர் ஆவுடையப்பன் புதன்கிழமை கேட்டறிந்தார்.

அப்போது அதிமுக சார்பில், கே.ஏ.செங்கோட்டையன் பேசியது:

கரும்புக்கு மாநில அரசு பரிந்துரை விலை வழங்குவது தொடர்பாக, தென்னிந்திய சர்க்கரை ஆலை உரிமையாளர்கள் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தனர். இந்த வழக்கை துரிதப்படுத்த கடந்த திமுக ஆட்சியில் முயற்சி மேற்கொள்ளப்படவில்லை. அதிமுக ஆட்சிக்கு வந்ததும், அதுதொடர்பான இரண்டு வழக்குகளும் ஒருங்கிணைக்கப்பட்டு உச்ச நீதிமன்றத்தில் நடைபெற்றது. 2005-ம் ஆண்டு இந்த வழக்கில் அரசுக்கு வெற்றி கிடைத்தது.

பின்னர், கரும்பு டன்னுக்கு ரூ. 1014 வழங்கப்பட்டது. ஆனால், அதிமுக ஆட்சியில் மத்திய அரசின் பரிந்துரை விலையான ரூ.745 மட்டுமே அளிக்கப்பட்டது என்ற தவறான தகவலை அமைச்சர் கொடுத்துள்ளார். ஒரு பைசா கூட கொடுக்கவில்லை என முந்தைய ஆட்சிக்கு களங்கம் விளைத்து தவறான தகவலைத் தெரிவித்துள்ளார். பேரவையில் தவறான தகவலைத் கூறினார் என்பதற்காக எங்கள் கட்சியின் உறுப்பினர் விஜயகுமார் போன்றவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது. எங்களுக்கு வழங்கப்பட்ட தீர்ப்பை அவர்களுக்கும் வழங்குவீர்களா என்றார் செங்கோட்டையன்.

**அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகம்:** கடந்த 2000-2001-ம் ஆண்டில் கரும்பு டன்னுக்கு ரூ.595 வழங்கப்பட்டது. கூடுதலாக ஒவ்வொரு 0.1 சதவீதம் கட்டுமானத்துக்கு ரூ.7 எனவும், மாநில அரசின் ஊக்கத் தொகையாக ரூ.180 சேர்த்து டன்னுக்கு ரூ.775 வழங்கப்பட்டது. 2001-2002-ம் ஆண்டு ஆட்சிக்கு வந்த அதிமுக அரசு அப்போது அமைச்சரவைக் கூட்டத்தைக் கூட்டி மாநில அரசு பரிந்துரை விலை செய்வதில்லை என்று தீர்மானிக்கப்பட்டு மத்திய அரசுக்குத் தெரிவித்து விட்டது. அதனால், தொடர்ந்து நான்கு ஆண்டுகளாக மத்திய அரசு அறிவித்த சட்டப்பூர்வ குறைந்தபட்ச விலையை மட்டுமே அதிமுக அரசு வழங்கியது.

2005-2006-ம் ஆண்டு கரும்பு அரவைப் பருவத்துக்கு மத்திய அரசு 9 சதம் சர்க்கரை கட்டுமானம் உள்ள ஒரு டன் கரும்புக்கு ரூ.795 என நிர்ணயித்தது. அந்த ஆண்டு தான் மாநில அரசு பரிந்துரை விலையாக 9 சதம் சர்க்கரை கட்டுமானத்துக்கு மத்திய அரசின் விலையோடு ரூ.219 சேர்த்து ரூ.1014 என அறிவித்தது. 2006-ம் ஆண்டு சட்டப் பேரவைத் தேர்தலுக்கான அறிவிக்கை அந்த ஆண்டு ஏப்ரலில் வெளியிடப்பட்டது. அதன்படி, தேர்தல் மே மாதம் நடைபெற்றது.

ஒவ்வொரு ஆண்டும் கரும்பு அரவை அக்டோபரில் தொடங்கி மே வரை நடைபெறும். இதனிடையே, தென்னிந்திய சர்க்கரை ஆலை அதிபர்கள் சங்கம் உச்ச நீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கில் கடந்த 2004-ம் ஆண்டு மே 5-ம் தேதி தீர்ப்பு வழங்கப்பட்டது. தீர்ப்புக் கிடைத்த ஒரு ஆண்டு நான்கு மாதங்கள் கழித்தும் அதிமுக அரசு அதை நடைமுறைப்படுத்தவில்லை. ஆனால், 2005-2006-ம் ஆண்டு அக்டோபர் மாதத்துக்கு மேல் கரும்பு அரவை செய்யப்படும் பருவத்துக்கு பொருந்தும் வகையில் கூடுதல் தொகையை வழங்கி அரசு உத்தரவிட்டது.

2006-ம் ஆண்டில், திமுக ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு மாநில அரசின் பரிந்துரை விலையுடன் சேர்த்து ஒரு டன் கரும்புக்கு ரூ.1025 வழங்கப்பட்டது. அதனுடன் கரும்பு வாகன வாடகை டன்னுக்கு ரூ.90 கொடுக்கப்பட்டது. தொடர்ந்து, ஒவ்வொரு ஆண்டும் அதிகரித்து வழங்கப்பட்டு வந்தது.

2009-2010-ம் ஆண்டு 9.5 சதம் சர்க்கரை கட்டுமானம் உள்ள ஒரு டன் கரும்புக்கு மத்திய அரசு சட்டப்பூர்வ குறைந்தபட்ச விலையாக ரூ.1077.60 என நிர்ணயித்தது. இதனுடன், மாநில அரசு பரிந்துரை விலையாக ரூ.359.80-ஐ கூட்டி, ஒரு டன் கரும்புக்கு ரூ.1437.40 என்ற அளவில் வழங்கப்பட்டது. மேலும், ஒவ்வொரு 0.1 கூடுதல் கட்டுமானத்துக்கு ரூ.11.30 வீதம் சேர்த்து, வாகன வாடகையாக டன்னுக்கு ரூ.90 என மொத்தம் ரூ.1550 வழங்கப்பட்டது. இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் கரும்பு டன்னுக்கு ரூ.2 ஆயிரம் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அதிமுக ஆட்சிப் பொறுப்பில் இருந்து 2001 முதல் 2005 வரையிலான 4 ஆண்டு காலத்தில் மத்திய அரசு அறிவித்த சட்டப்பூர்வ குறைந்தபட்ச விலை மட்டுமே வழங்கப்பட்டு வந்தது. ஆனால், மாநில அரசு பரிந்துரை விலை ஏதும் அளிக்கவில்லை. எதிர்க்கட்சித் துணைத் தலைவரின் கேள்விக்குப் பதிலாக மத்திய அரசு அறிவித்த சட்டப்பூர்வ குறைந்தபட்ச விலைக்கு மேலாக அதிமுக அரசு ஒரு பைசா கூட வழங்கவில்லை என்பதைத் தான் சொன்னேன். இதில், உரிமை மீறல் ஏதுமில்லை என்றார் வீரபாண்டி ஆறுமுகம்.

இதற்கு பதிலளித்த பேரவைத் தலைவர் ஆவுடையப்பன், இரு தரப்பினரின் பதிலையும் கேட்டுகொண்டேன். எனது, முடிவை பின்னர் அறிவிக்கிறேன் என்றார்.

**நவரைப் பட்டம் நெல்லுக்கு மேலுரம்**

First Published : 21 Apr 2010 10:31:53 PM IST

கடலூர், ஏப். 21: நவரைப் பட்ட நெல் சாகுபடி செய்திருக்கும் விவசாயிகளுக்கு கீழ்காணும் ஆலோசனைகளை, கடலூர் மாவட்ட வேளாண் இணை இயக்குநர் ச.இளங்கோவன் அறிவித்துள்ளார்.

அவரது செய்திக்குறிப்பு:

நவரைப்பட்ட நெல் பயிருக்கு மேலுரம் அவசியம் இடவேண்டும். குறுகியகால நெல் ரகங்களுக்கு மண் பரிசோதனை சிபாரிசுப்படி உரமிட வேண்டும்.

அல்லது வேளாண் துறை சிபாரிசுப்படி, ஏக்கருக்கு 50- 20- 20 கிலோ என்ற அளவில் தழை, மணி, சாம்பல் சத்து தரவல்ல ரசாயன உரமிட வேண்டும்.

அடியுரமாக 25 சதவீதம் தழைச்சத்து, 100 சதவீதம் மணிச்சத்து, 50 சதவீதம் சாம்பல் சத்து இடவேண்டும்.

மீதம் உள்ள தழைச்சத்து 75 சதவீதம் சாம்பல் சத்து 50 சதவீதம் ஆகியவற்றை மேலுரமாக இடவேண்டும்.

நட்ட 15 நாளில் தூர்கட்டும் பருவத்தில் மேலுரமாக 10 கிலோ தழைச்சத்து தரவல்ல யூரியா உரம் 22 கிலோ இடவேண்டும்.

2-வது மேலுரமாக நட்ட 30 நாளில் கதிர்முனை உருவாகும் பருவத்தில் 10 கிலோ தழைச் சத்துக்கு யூரியா 22 கிலோவும், சாம்பல் சத்து 10 கிலோ தரவல்ல

பொட்டாஷ் உரம் 17 கிலோவும் இடவேண்டும்.

3-வது மேலுரமாக நட்ட 45 நாளில் பூக்கும் பருவத்தில் 10 கிலோ தழைச்சத்து தரவல்ல யூரியா 22 கிலோ இடவேண்டும்.

மேலுரம் இடும்போது நிலத்தில் உள்ள நீரை வடித்து, போதுமான ஈரப்பதம் இருக்கும்போது உரமிட வேண்டும்.

மேலுரம் இட்ட 24 மணி நேரம் கழித்து நீர்பாய்ச்ச வேண்டும்.

நவரை நெல் சாகுபடி செய்துள்ள விவசாயிகள் சரியான தருணத்தில் மேலுரமிட்டு, கூடுதல் மகசூல் பெற்றுப் பயனடையக் கேட்டுக் கொள்கிறேன் என்று செய்திக் குறிப்பில் அவர் தெரிவித்துள்ளார்.

**நவரைப் பட்டம் நெல்லுக்கு மேலுரம்**

First Published : 21 Apr 2010 10:31:53 PM IST

கடலூர், ஏப். 21: நவரைப் பட்ட நெல் சாகுபடி செய்திருக்கும் விவசாயிகளுக்கு கீழ்காணும் ஆலோசனைகளை, கடலூர் மாவட்ட வேளாண் இணை இயக்குநர் ச.இளங்கோவன் அறிவித்துள்ளார்.

அவரது செய்திக்குறிப்பு:

நவரைப்பட்ட நெல் பயிருக்கு மேலுரம் அவசியம் இடவேண்டும். குறுகியகால நெல் ரகங்களுக்கு மண் பரிசோதனை சிபாரிசுப்படி உரமிட வேண்டும்.

அல்லது வேளாண் துறை சிபாரிசுப்படி, ஏக்கருக்கு 50- 20- 20 கிலோ என்ற அளவில் தழை, மணி, சாம்பல் சத்து தரவல்ல ரசாயன உரமிட வேண்டும்.

அடியுரமாக 25 சதவீதம் தழைச்சத்து, 100 சதவீதம் மணிச்சத்து, 50 சதவீதம் சாம்பல் சத்து இடவேண்டும்.

மீதம் உள்ள தழைச்சத்து 75 சதவீதம் சாம்பல் சத்து 50 சதவீதம் ஆகியவற்றை மேலுரமாக இடவேண்டும்.

நட்ட 15 நாளில் தூர்கட்டும் பருவத்தில் மேலுரமாக 10 கிலோ தழைச்சத்து தரவல்ல யூரியா உரம் 22 கிலோ இடவேண்டும்.

2-வது மேலுரமாக நட்ட 30 நாளில் கதிர்முனை உருவாகும் பருவத்தில் 10 கிலோ தழைச் சத்துக்கு யூரியா 22 கிலோவும், சாம்பல் சத்து 10 கிலோ தரவல்ல

பொட்டாஷ் உரம் 17 கிலோவும் இடவேண்டும்.

3-வது மேலுரமாக நட்ட 45 நாளில் பூக்கும் பருவத்தில் 10 கிலோ தழைச்சத்து தரவல்ல யூரியா 22 கிலோ இடவேண்டும்.

மேலுரம் இடும்போது நிலத்தில் உள்ள நீரை வடித்து, போதுமான ஈரப்பதம் இருக்கும்போது உரமிட வேண்டும்.

மேலுரம் இட்ட 24 மணி நேரம் கழித்து நீர்பாய்ச்ச வேண்டும்.

நவரை நெல் சாகுபடி செய்துள்ள விவசாயிகள் சரியான தருணத்தில் மேலுரமிட்டு, கூடுதல் மகசூல் பெற்றுப் பயனடையக் கேட்டுக் கொள்கிறேன் என்று செய்திக் குறிப்பில் அவர் தெரிவித்துள்ளார்.

**விதைகளைப் பாதுகாக்க புதிய முறை**

First Published : 22 Apr 2010 12:00:00 AM IST

Last Updated : 22 Apr 2010 12:46:47 AM IST



குறைந்த எடையில் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள விதைப் பத்தையம்.

சிதம்பரம், ஏப். 21: கடந்த சில மாதங்களாக தமிழகத்தில் மரபணு விதைகள் பயிரிடுவது குறித்த விவாதம் வெற்றிகரமாக முடிந்து சிறு மற்றும் குறு விவசாயிகள், விவசாயப் பிரதிநிதிகளின் தொடர் கோரிக்கையை ஏற்று மத்திய, மாநில அரசுகள் அவற்றுக்கு தடை விதித்துள்ளன.

இந்நிலையில் பாரம்பரிய விதை ரகங்களை பாதுகாப்பது ஒரு முக்கிய தேவையாகவும், பிரச்னையாகவும் உருமாறிவிட்டது. இத்தகைய சூழலில் பாரம்பரிய நாட்டு ரக விதைகளை விவசாயிகள் தங்கள் கிராமங்களில் பாதுகாத்து அடுத்த பருவத்துக்கு பயன்படுத்தும் நோக்கில் தற்போதைய புதிய விதைப் பாதுகாப்பு பத்தையம் (New seed granary) உருவாக்கப்பட்டுள்ளது.

விதை பத்தையத்தின் சிறப்புகள்: கடந்த பல ஆண்டுகளாக தமிழகத்தில் விதை நெல், பயிர்களை சேமிக்க மண், மரம் மற்றும் இரும்பு பத்தையங்களே கிராமப் புறங்களில் அதிகளவு பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

பல நடைமுறை சிக்கல்களை கொண்ட பாரம்பரிய விதைப் பத்தையங்களுக்கு ஒரு நல்ல மாற்றாக புதிய முறை விதைப் பத்தையம் உருவாக்கப்பட்டுள்ளது. மண் மற்றும் மரச் சீவல்கள் அல்லது மரத்துகள்களைக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ள இப்புதிய நவீன விதை பத்தையங்களின் எடை மிகக்குறைவு. இவற்றை அடுக்குகளாக உருவாக்கி உள்ள காரணத்தால் எளிதில் பிரித்துக் கொள்ளலாம். மாட்டிக்கொள்ளவும் செய்யலாம்.

இப்புதிய முறை விதைப் பத்தையத்தை தேவை இல்லாத காலங்களில் எளிதாக பிரித்து பரண்களில் அடுக்கி வைத்துக் கொள்ளலாம். தேவைப்படும் போது மீண்டும் எடுத்து பயன்படுத்திக் கொள்ளும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது.

÷செயல்பாடுகள்: புதிய விதை முறை பத்தையத்தில் விவசாயிகள் அடுத்த பருவத்துக்கு அல்லது ஆண்டுக்கு தேவையான விதை நெல், பயிர் வகைகளை நன்றாக காய வைத்து வேப்ப இலை, நொச்சி இலையை கலந்து சேமித்து வைக்கின்றனர். பின்னர் பத்தையத்தை மூடி ஒரு அறையின் ஓரத்தில் வைத்து விடுகின்றனர்.

தொடர் மழை மற்றும் வெயில் காலத்தில் ஈரப்பதத்தில் இருந்து விதைகளை பாதுகாத்து பூச்சி தாக்குதல்களையும் தடுக்கிறது. நன்றாக வெயில் வரும் காலங்களில் பத்தையத்தை பிரித்து காய வைத்து விதைகளை பாதுகாக்கும் நடைமுறையும் உள்ளது.

சில சமயங்களில் பருவம் தப்பி அல்லது சாகுபடிப் பணிகளை மேற்கொள்ள முடியாத நடைமுறை சூழல் எழும்போது பத்தையத்தில் உள்ள விதை நெல்லை வெளியே எடுத்து சுத்தப்படுத்தி பழைய வேப்ப இலைகளை, நொச்சி இலைகளை அகற்றிவிட்டு புதிய இலைகளைப் போட்டு மீண்டும் விதை நெல்லை பாதுகாக்கும் நடைமுறை பின்பற்றப்படுகிறது.

÷பிற பயன்கள்: தற்போதைய புதிய முறை விதை பத்தையம் அளவுக்கு ஏற்றவாறு ரூ.800 முதல் ரூ.1200 வரை வேளாண் சந்தைகளில் விற்பனை செய்யப்படுகிறது.

விவசாயிகள் ஒரு முறை முதலீடு செய்தால் போதும் பல ஆண்டுகளுக்கு தொடர்ச்சியாக பயன்படுத்த முடியும். விவசாயிகள், பண்ணை மகளிர் தங்களின் பாரம்பரிய விதைகளை இப்புதிய முறை விதை பத்தையங்கள் வாயிலாக எளிதில் பாதுகாக்க முடியும்.

எனவே குறைந்தளவு முதலீட்டில், நீண்ட நாள் விதைகளை பாதுகாத்து நமது பாரம்பரிய சொத்துகளை சேமித்து வைக்கலாம்.

இப்புதிய விதை முறை விதை பத்தையங்களைப் பயன்படுத்தி குறைந்த செலவில் வேளாண் பணிகளை செய்து விவசாயிகள் அதிக வளம் பெற முடியும் என்கிறார் அண்ணாமலைப் பல்கலைக்கழக வேளாண் விரிவாக்கத்துறை விரிவுரையாளர் தி.ராஜ்பிரவீன்.

**பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்க செயலர்களுக்கு ஊக்கப் பரிசு**

First Published : 21 Apr 2010 12:00:12 PM IST

உதகை ஏப். 20: நீலகிரி மாவட்டத்தில் அதிகளவிலான பால் உற்பத்தி மற்றும் தரத்தில் சிறப்பாகச் செயல்பட்டதற்காக 2 பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்க செயலர்களுக்கு தலா ரூ.5000 ஊக்கப் பரிசு வழங்கப்பட்டது.

தமிழக பால் வளத்துறை அமைச்சர் சட்டப்பேரவையில் தனது துறை தொடர்பான மானியக் கோரிக்கையில் பேசும்போது, ஒவ்வொரு மாவட்ட பால் உற்பத்தியாளர் ஒன்றியங்களிலும், பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கத்திலுள்ள பாலின் தரம் மற்றும் அதிக பால் உற்பத்தி செய்வதில் திறம்பட செயல்படும் 3 செயலர்களுக்கு ரூ.5,000 ஊக்கப் பரிசும், நற்சான்றிதழும் வழங்கப்படுமென அறிவித்திருந்தார்.

இதன்படி நீலகிரி மாவட்டத்தில் ஜெகதளா பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்க செயலர் ஆர்.லிங்கராஜ் மற்றும் ஆடாசோலை பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்க செயலர் பி.ரங்கசாமி ஆகியோர் இவ்விருதுக்காக தெரிவு செய்யப்பட்டிருந்தனர்.

இவர்கள் இருவருக்கும் உதகையில் ஆட்சியர் அலுவலகத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் அர்ச்சனா பட்நாயக் ரொக்கப் பரிசுகளையும், சான்றிதழ்களையும் வழங்கினார். அப்போது ஆவின் பொதுமேலாளர் எம்.ஞானகுரு, உதவி பொதுமேலாளர் டாக்டர் தியாகேசன், பால் வள துணைப் பதிவாளர் பொன்னுசாமி ஆகியோருடன் சங்கத்தின் தனி அலுவலர்கள் எம்.சச்சிதானந்தன் மற்றும் எம்.கார்த்திகேயன் ஆகியோரும் உடனிருந்தனர்.

**செயற்கை உரம், பூச்சி மருந்துகளுக்கு மாற்று ஏற்பாடு செய்ய வலியுறுத்தல்**

First Published : 21 Apr 2010 12:54:14 PM IST

திருவாரூர், ஏப். 20:இயற்கை வேளாண்மையை ஊக்குவிக்கும் வகையில், செயற்கை உரம், பூச்சி மருந்துகளுக்கு மாற்று ஏற்பாட்டை அரசு மேற்கொள்ள வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

திருவாரூரில் நடைபெற்ற திருவாரூர் மாவட்ட சித்தர் குரு மரபு மருத்துவர்கள் சங்கத்தின் ஆலோசனைக் கூட்டத்தில் இதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மேலும், மரபணு மாற்றுக் கத்தரிக்காயை தமிழகத்தில் அனுமதிப்பதில்லை என்ற தமிழக அரசின் முடிவை வரவேற்பது. ரசாயண உரம், பூச்சிக் கொல்லி மருந்துகளுக்கு மாற்றாக இயற்கை விவசாயம் மேற்கொண்டால் மக்களுக்கு நோய்கள் நீங்கும், மருத்துவச் செலவும் குறையும்.

தமிழகத்தில் சட்ட மேலவை அமைக்க முடிவு செய்திருப்பதை வரவேற்கிறோம். இந்த அவையில் தமிழ் மருத்துவத்தில் பற்று கொண்டவர்களுக்கும், தமிழ் பற்று கொண்டவர்களுக்கும் முன்னுரிமை அளிக்க வேண்டும்.

மயிலாடுதுறை - சென்னை இடையே ரயில் போக்குவரத்து விரைவில் தொடங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது மகிழ்ச்சியளிக்கிறது. மேலும் திருவாரூர் - மயிலாடுதுறை அகல ரயில் பாதைப் பணிகளையும் விரைந்து முடித்து, இத்தடத்திலும் ரயில் போக்குவரத்தைத் தொடங்க வேண்டும். ஏற்கனவே இருந்த பேரளம் - காரைக்கால், திருத்துறைப்பூண்டி - வேதாரண்யம், நீடாமங்கலம் - மன்னார்குடி ஆகிய ரயில் பாதைகளை மீண்டும் அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.
திருவாரூர் நகரில் புதைசாக்கடைத் திட்டப் பணிகள் முடிவுற்ற இடங்களில் சாலைப் பணிகளை விரைந்து மேற்கொள்ள வேண்டும் என்பன உள்ளிட்டத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

தினமலர்

**பருத்தி ஏற்றுமதிக்கு தடை; ஜவுளி உற்பத்தியாளர் வரவேற்பு : விலை குறையும் என எதிர்பார்ப்பு**
ஏப்ரல் 22,2010,00:00 IST

சோமனூர் : நூல் விலை உயர்வுக்கு ஏற்பட்டுள்ள எதிர்ப்பை அடுத்து மத்திய அரசு பருத்தி ஏற்றுமதிக்கு தடை விதித்துள்ளது. இதன் மூலம் நூல் விலை குறையும் வாய்ப்பு உள்ளதாக ஜவுளி உற்பத்தியாளர்கள் எதிர்பார்க்கின்றனர்.

கோவை, திருப்பூர் மாவட்டங்களில் பல ஆயிரம் விசைத்தறிக் கூடங்கள் உள்ளன. இவற்றில் இரண்டு லட்சம் விசைத்தறிகள் இயங்கி வருகின்றன. பெரும்பாலும் காடா ரக துணிகள் இந்த விசைத்தறிகளில் உற்பத்தியாகின்றன. சோமனூர், பல்லடம், அவிநாசி, திருப்பூர், ஈரோடு, திருச்செங்கோடு பகுதிகளில் உள்ள ஜவுளி உற்பத்தியாளர்கள் இந்த விசைத்தறிக் கூடங்களுக்கு பாவு நூல் அனுப்பி துணி உற்பத்தி செய்கின்றனர். கடந்த பல மாதங்களாக, நூல் விலை ஒரே சீராக இல்லாமல் ஏற்ற இறக்கமாக காணப்பட்டது. இருப்பினும், இது ஜவுளி மார்க்கெட்டில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தவில்லை. ஆனால், நடப்பாண்டில் கடந்த இரண்டு மாதங்களாக முன் எப்போதும் இல்லாத வகையில் அனைத்து ரக நூல் மூட்டைகளும் கடுமையாக விலை உயர்ந்தன. ரக வாரியாக மூட்டைக்கு 400 ரூபாய் முதல் 1,200 ரூபாய் வரை நூல் விலை உயர்ந்தது.

நூல் விலை சீராக இல்லாத நிலையிலும், நிர்வாக மற்றும் நடைமுறைச் சிக்கல்கள் காரணமாக, விசைத்தறிகள் இயக்கம் நிறுத்தக் கூடாது என்ற அடிப்படையில் சிறு நஷ்டத்தைத் தாங்கிக் கொண்டு ஜவுளி உற்பத்தியாளர்கள் தொடர்ந்து உற்பத்தியை செய்து வந்தனர். ஆனால், அண்மையில் ஏற்பட்ட விலை உயர்வு சிறிய மற்றும் நடுத்தர ஜவுளி உற்பத்தியாளர்களையும், சொந்த விசைத்தறி ஜவுளி உற்பத்தியாளர்களையும், பெரும்பாலும் கடன் அடிப்படையில் வர்த்தகம் செய்தவர்களையும் பெரும் பாதிப்புக்குள்ளாக்கியது.

சொந்தமாக நூல் மில் வைத்துள்ள ஜவுளி உற்பத்தியாளர்கள், முழு அளவில் கடன் இல்லாமல் ரொக்க அடிப்படையில் மூலப்பொருள் கொள்முதல் மற்றும் துணி விற்பனையை செய்து வரும் ஜவுளி உற்பத்தியாளர்கள் மட்டுமே ஓரளவுக்கு தாக்குப் பிடிக்கும் நிலை காணப்பட்டது. கடுமையான நூல் விலை உயர்வு அனைத்து தரப்பையும் கடுமையாக பாதித்தது. நூல் விலை உயர்வுக்கேற்ப துணிகளின் விற்பனை விலை உயரவில்லை. நூல் விலை உயர்வைத் தடுக்கவும், நூல் மற்றும் பருத்தி ஏற்றுமதியை தடை செய்யவும் கோரி ஜவுளி உற்பத்தியாளர்கள் போராடினர். இது குறித்து நடவடிக்கை எடுத்த மத்திய அரசு, நூல் ஏற்றுமதிக்கு வழங்கப்படும் 7.67 சதவீதம் ஊக்குவிப்பு தொகையை ரத்து

செய்தது. மேலும், பருத்தி ஏற்றுமதிக்கு டன்னுக்கு 2,500 ரூபாய் ஏற்றுமதி வரியும் விதித்தது. இந்த வரி பின் தேதியிட்டு ஏப். 9ம் தேதி முதல் விதிக்கப்பட்டது. ஆனால், இந்த நடவடிக்கையால் எந்த மாற்றமும் ஏற்படவில்லை என தொழில்துறையினர் கூறினர்.

நூல் ஏற்றுமதிக்கு ரத்து செய்யப்பட்ட ஊக்குவிப்பு தொகை குறித்து அரசு ஆணை பிறப்பிக்கவில்லை. இதனால், நூல் ஏற்றுமதி வழக்கம் போல நடந்து வருகிறது. சோமனூர் பகுதியில் ஒரு மாதமாக கடும் விலை உயர்வால் நூல் கொள்முதல் குறைந்தது. கடந்த வாரம் துவக்கத்தில் காணப்பட்ட நூல் விலை, போராட்டம் காரணமாக சற்று குறைந்தது. நூல் விலை குறைந்தவுடன், கொள்முதல் அதிகரித்தது. இதையடுத்து, குறைக்கப்பட்ட நூல் விலையில் மாற்றம் ஏற்பட்டது. இந்நிலையில் பருத்தி ஏற்றுமதிக்கு மத்திய அரசு தடை விதித்துள்ளது. இதனால், நூல் விலை குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது. அரசின் இந்த நடவடிக்கையை சோமனூர் ஜவுளி உற்பத்தியாளர் சங்கம், சொந்த விசைத்தறி ஜவுளி உற்பத்தியாளர் சங்கம், நாடா இல்லாத தறி உரிமையாளர் சங்கம், சைசிங் மில் உரிமையாளர் சங்கம் உள்ளிட்ட அமைப்புகள் வரவேற்றுள்ளன. இருப்பினும் நேற்றைய நிலவரப்படி நூல் விலையில் எந்த மாற்றமும் இல்லை. துணிக்கும் விலை உயரவில்லை. இதனால், ஜவுளி உற்பத்தியாளர்களுக்கு வர்த்தகத்தில் பெரும் குழப்பம் ஏற்பட்டுள்ளது.

**தென்னையில் ஊடுபயிராக பூசணி**

பொள்ளாச்சி : பொள்ளாச்சி அடுத்துள்ள டி.நல்லிக்கவுண்டன்பாளைத்தில் சித்திரை பட்டத்தை முன்னிட்டு விளைநிலங்களில் தென்னையில் ஊடுபயிராக பூசணி சாகுபடி செய்யும் பணி தீவிரமாக நடக்கிறது.
பொள்ளாச்சி சுற்றியுள்ள கிராமப்பகுதிகளில் மானாவாரி பயிர்களை சாகுபடி செய்வதற்காக விவசாயிகள் ஆர்வமுடன் மழையை எதிர்நோக்கி காத்திருந்தனர். சில நாட்களாக ஆங்காங்கே மழை பெய்தநிலையில், விவசாயிகள் மிகுந்த மகிழ்ச்சியடைந்துள்ளனர். சித்திரை பட்டத்திற்கு சாகுபடி செய்ய ஏதுவாக வறண்டிருந்த நிலத்தை உழுது வருகின்றனர். டி.நல்லிக்கவுண்டன்பாளையத்தில் விளைநிலங்களில் தென்னை மரங்களுக்கு இடையில் பூசணிசெடிகளை ஊடுபயிராக சாகுபடி செய்யும் பணியில் சில விவசாயிகள் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர்.
விவசாயிகள் கூறியதாவது: சிறு விவசாயிகள் அனைவரும் பெரும்பாலும் மழையை நம்பி பயிரிட வேண்டியுள்ளது. தற் போது ஆங்காங்கே மழை பெய்வதையடுத்து, சித்திரை பட்டத்திற்கு தயாராகி வருகிறோம். எளிதில் பயன்தரக்கூடிய வகையில், தென்னையில் ஊடுபயிராக பூசணிக்காய் செடிகளை வளர்க்க திட்டமிடப்பட்டுள்ளது. எனவே, விளைநிலங்களில் பூசணி விதைகளை விதைக்கும் பணி மும்முரமாக நடக்கிறது. இவ்வாறு, விவசாயிகள் தெரிவித்தனர்.

**கொப்பரை கொள்முதல் செய்த 400 விவசாயிகளுக்கு நிலுவை : ரூ. 45 லட்சம் பட்டுவாடா எப்போது?**

பொள்ளாச்சி : கொப்பரை கொள்முதல் செய்த 400 விவசாயிகளுக்கு 45 லட்சம் ரூபாய் பட்டுவாடா செய்யப்படாமல் நிலுவையில் உள்ளது.
பொள்ளாச்சி அரசு கொப்பரை கொள்முதல் மையத்தில், தென்னை விவசாயிகள் பதிவு செய்து பதிவு மூப்பு அடிப்படையில் கொப்பரையை விற்பனை செய்கின்றனர். அரசு அறிவித்துள்ள ஆதரவு விலை திட்டத்தில் ஒரு கிலோ கொப்பரை 44.50 ரூபாய்க்கு கொள்முதல் செய்யப்படுகிறது. மார்ச் 15ம் தேதியோடு கடந்த ஆண்டுக்கான கொப்பரை கொள்முதல் நிறைவு செய்யப்பட்டுள்ளது. ஆனால்,  பிப்., 18ம் தேதி வரை கொப்பரை வர்த்தகம் செய்த விவசாயிகளுக்கு மட்டுமே பணம் பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது. அதன்பின், கொப்பரை வர்த்தகம் செய்த விவசாயிகளுக்கு பணம் வழங்கப்படாமல் நிலுவையில் உள்ளது. அரசு கொள்முதல் மையத்தில் கொப்பரை வர்த்தகம் செய்த விவசாயிகள் பணம் கேட்டு தினமும் நடையாக நடக்கின்றனர். கொள்முதல் மைய அதிகாரிகளும் பணம்பட்டுவாடா பற்றி உறுதியான தகவல்கள் எதுவும் கூறாமல் விவசாயிகளை அலைக்கழிக்கின்றனர்.

கொப்பரை விவசாயிகள் கூறியதாவது: தேங்காய்க்கு கட்டுபடியான விலை கிடைக்காததால் கொப்பரையாக்கி, அரசு கொள்முதல் மையத்தில் விற்பனை செய்கிறோம். கொப்பரை கொள்முதல் நடந்த போது 15 நாளுக்குள் பணம் பட்டுவாடா செய்யப்பட்டது. கடந்த பிப்., 18ம் தேதிக்கு பிறகு கொப்பரை வர்த்தம் செய்த விவசாயிகளுக்கு இன்னும் பணம் வழங்கவில்லை. பொள்ளாச்சி கொள்முதல் மையம், ஆனைமலை, கிணத்துக்கடவு மற்றும் திம்மங்குத்து பகுதியிலுள்ள துணை கொள்முதல் மையங்களில் மார்ச் 15ம் தேதி வரையிலும் 400 விவசாயிகள் நூறு டன் கொப்பரையை விற்றுள்ளனர். விவசாயிகளுக்கு சுமார் 45 லட்சம் ரூபாய் பணம் பட்டுவாடா செய்யாமல் நிலுவையில் உள்ளது.
மார்ச் மாத இறுதிக்குள் பணம் வழங்கப்படும் என்று அதிகாரிகள் கூறினர். ஆனால் ஏப்ரல் 20 தேதிகளை கடந்த நிலையிலும் பணப்பட்டுவாடா பற்றி அதிகாரிகள் உறுதியான தகவலை கூறவில்லை. விவசாயிகள் பெயரில் செக் போடப்பட்டுள்ளதா என்று தினமும் கொள்முதல் நிலையத்திற்கு அலைந்து கொண்டுள்ளோம். இதேநிலை தொடர்ந்தால் பணம் கிடைக்காத விவசாயிகள் கொள்முதல் மையத்தை முற்றுகையிட்டு போராடுவோம். இவ்வாறு, விவசாயிகள் தெரிவித்தனர்.
கொள்முதல் மைய அதிகாரிகள் கூறியதாவது: பிப்., 22ம் தேதி வரை கொப்பரை விற்றவர்களுக்கு பணம் வந்து விட்டது. அதில், 18ம் தேதி வரையிலும் பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது. மீதமுள்ள நான்கு நாட்களில் கொப்பரை விற்பனை செய்தவர்களுக்கு 'செக்' வழங்க வேண்டும். அதன்பின், கொப்பரை விற்றவர்களுக்கு இன்னும் பணம் வரவில்லை. அரசுக்கு கடிதம் எழுதப்பட்டுள்ளது. பணம் வந்ததும் விவசாயிகளுக்கு உடனடியாக பணப்பட்டுவாடா செய்யப்படும் என்றார்.

**பல லட்ச ரூபாய் நஷ்டத்தால் விவசாயிகள் கலக்கம்!: பலத்த காற்றுக்கு வெற்றிலை கொடிக்கால் நாசம்**

தர்மபுரி: தர்மபுரியில் இரு நாள் பெய்த கோடை மழையால் மக்கள் வெயில் உக்கிரத்தில் இருந்து நிம்மதியடைந்தனர். இரு நாள் பலத்த காற்றுடன் பெய்த மழைக்கு வெற்றிலை கொடிக்கால்கள் சேதமடைந்தன.

வெப்ப மண்டல பகுதியான தர்மபுரி மாவட்டத்தில் எந்தாண்டும் இல்லாத அளவுக்கு வெயில் உக்கிரம் அதிகம் இருந்தது. மார்ச் மாதம் முழுவதும் 99 முதல் 100 டிகிரி வரையில் வெயில் வாட்டி வதைத்தது. கடந்த ஏப்ரல் முதல் தேதி முதல் வெயில் உக்கிரம் இன்னும் அதிகரித்தது. கடந்த 10 நாட்களாக வெயில் 101 டிகிரி முதல் 102 டிகிரி வரையில் இருந்தது. மாவட்டத்தின் பல்வேறு பகுதியில் குடிநீர் தட்டுப்பாடு ஏற்பட்டது. பலபகுதியில் நிலத்தடி நீர் மட்டம் பெரும் அளவில் பாதிக்கப்பட்டது. கிராம பஞ்சாயத்துக்களில் நிலத்தடி நீர் மட்டம் குறைந்ததால், உள்ளாட்சி அமைப்புகள் மூலம் குடிநீர் விநியோகம் செய்யும் பகுதியில் தண்ணீர் கிடைக்காமல் ஐந்து நாட்கள் முதல் 10 நாட்களுக்கு ஒரு முறை குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வந்தது. கோடை மழை பெய்தால் மட்டுமே வெயில் உக்கிரம் தணிவதோடு, தண்ணீர் பிரச்னை தீரும் நிலை ஏற்பட்டது. இந்நிலையில், கடந்த 19ம் தேதியும், நேற்று முன்தினமும் மாவட்டத்தில் பல பகுதியில் பலத்த காற்றுடன் மழை பெய்தது.

பென்னாகரம், தர்மபுரி ஆகிய தாலுகா பகுதியில் கருப்பு மற்றும் வெள்ளை ரக வெற்றிலைகளை விவசாயிகள் சாகுபடி செய்து வருகின்றனர். மிதமான தண்ணீர் தேவையுள்ள வெற்றிலை பயிர்களுக்கு நிலத்தடி நீர் மட்டம் குறைவு காரணமாக விவசாயிகள் லாரிகளில் தண்ணீர் எடுத்து வந்து பாசனம் செய்து வந்தனர். இரு நாள் பெய்த மழைக்கு தர்மபுரி, ராஜாபேட்டை, காரிமங்கலம், செல்லிம்யம்பட்டி, பூட்டுக்காரன்தோப்பு, சோகத்தூர், சோமனஅள்ளி, ஏ.செக்காரப்பட்டி, தாசம்பட்டி, தாளப்பள்ளம், அன்னசாகரம், லளிகள் ஆகிய பகுதிகளில் சாகுபடி செய்யப்பட்ட வெற்றிலை கொடிக்கால்கள் காற்றுக்கு தாக்கு பிடிக்காமல் சாய்ந்தன. வெற்றிலைக்கு தற்போது நல்ல விலை கிடைத்து வந்த நிலையில், கொடிக்கால் சாய்ந்ததால், விவசாயிகள் கலக்கம் அடைந்தனர். சாய்ந்த வெற்றிலை கொடிக்காலை சீர் செய்யும் பணிகளில் விவசாயிகள் தீவிரமாக ஈடுபட்டனர்.

கடந்த சில மாதங்களுக்கு முன் பென்னாகரம் தாலுகா பகுதியில் குரங்குகள் தொல்லையால் விவசாயிகள் பாதிக்கப்பட்ட நிலையில் தற்போது, பலத்த காற்றுக்கு வெற்றிலை கொடிகள் பாதிப்படைந்திருப்பது விவசாயிகள் மத்தியில் வேதனையை கொடுத்துள்ளது. நேற்று முன்தினம் இரவு பெய்த மழையால் தர்மபுரி நகரின் தாழ்வான பகுதியில் மழை நீர் பெருக்கெடுத்து ஓடியது. வெயில் வாட்டத்தில் இருந்து மழையால் மக்கள் நிம்மதி அடைந்தனர். நற்று முன்தினம் இரவு முழுவதும் குளிர்ந்த சீதோஷண நிலை நிலவியது. நேற்று காலை வழக்கம் போல் காலை 6 மணிக்கு வெயில் உக்கிரத்துடன் துவங்கியது. சாலைகளில் மழைநீர் தேங்கியிருந்தால், வெயில் உக்கிரத்தினால் வழக்கமாக வீசும் அனல் காற்றின் தாக்கம் நேற்று குறைந்திருந்தது. இரு நாள் பெய்த மழையால் வெயில் உக்கிரத்தில் தணிந்த போதும், பகல் நேரங்களில் வழக்கம் போல் வெயில் வாட்ட துவங்கியதால், கடும் வெயிலுக்கு இடையில் சற்று ஆறுதலாக மழை இருந்தது.

மழையால் தர்மபுரி நகரின் முக்கிய சாலையான பஸ் ஸ்டாண்ட் பகுதியை சுற்றியுள்ள ஆறுமுக ஆச்சாரி தெரு, முகமது அலி கிளப் சாலை ஆகிய பகுதிகள் சேறும், சகதியுமாக மாறிப்போனது. சாக்கடை கால்வாய்களில் பல இடங்களில் அடைப்பு ஏற்பட்டு, சாக்கடை கழிவு நீர் சாலைகளில் பெருக்கெடுத்து சென்றது. நகரின் பல தெருக்களில் சாக்கடை கழிவுகள் தேங்கி துர்நாற்றம் அடித்தது. வாட்டும் வெயிலுக்கு இடையில் தொடர்ந்து இரு நாட்கள் பெய்த மழையால் மக்கள் இரவு நேரத்தில் புழுக்கத்தில் இருந்து தப்பினர்.

**தக்காளி விலை மீண்டும் உயர்வு**

தர்மபுரி: தர்மபுரி மாவட்டத்தில் இரு நாள் பெய்த மழையை தொடர்ந்து தக்காளி விலை உயர்ந்துள்ளது. தர்மபுரி மாவட்டத்தில் பாலக்கோடு, பென்னாகரம் தாலுகா பகுதியில் அதிக அளவில் தக்காளி உற்பத்தி செய்யப்படுகிறது. இங்கு உற்பத்தி செய்யப்படும் தக்காளி தென் மாவட்டங்களுக்கு அதிக அளவில் விற்பனைக்கு அனுப்பப்பட்டு வருகிறது. நாட்டு தக்காளியை விட வீரிய ரக தக்காளியை விவசாயிகள் அதிக அளவில் சாகுபடி செய்வதால், உற்பத்தியின் அளவு ஏற்ற, இறக்க நிலையிருப்பதால், உற்பத்தியை பொறுத்து விலையும் ஏற்ற, இறக்கத்தில் இருக்கும்.

கடந்த மாதம் மார்ச் வரையில் தக்காளி கிலோ 5 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டது. கடந்த வாரம் வரையில் 6 முதல் 7 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டது. இரு நாட்களாக தர்மபுரி மாவட்டத்தில் பரவலான மழை பெய்ததை தொடர்ந்து தக்காளி விலை மீண்டும் உயர்ந்துள்ளது. ஒரு கிலோ தக்காளி சில்லறை விற்பனையில் 12 முதல் 15 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. உழவர் சந்தையில் ஒரு கிலோ 11 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டது. கடந்த காலங்களில் உழவர் சந்தையில் நாட்டுதக்காளி மற்றும் வீரிய ரக தக்காளிகளுக்கு ஒரே விலை நிர்ணயம் செய்யப்பட்டு வந்தது. விவசாயிகள் பெரும் அளவில் வீரிய ரக தக்காளிகளை அதிகம் சாகுபடி செய்தனர். கடந்த சில நாட்களாக நாட்டு தக்காளிக்கு வீரிய ரக தக்காளியை விட கிலோவுக்கு இரண்டு ரூபாய் அதிகம் நிர்ணயம் செய்யப்பட்டு விற்பனை செய்வதால், உழவர் சந்தையில் விவசாயிகள் அதிக அளவில் நாட்டு தக்காளியை விற்பனைக்கு கொண்டு வரத்துவங்கியுள்ளனர். கேரட், பீன்ஸ், நூல்கோல், பீட்ரூட் ஆகியவை விலை கடந்த வாரம் வரையில் கிலோ 12 முதல் 18 ரூபாய் வரையில் இருந்தது. தற்போது, கிலோ 30 முதல் 40 ரூபாய் வரையில் விலை உயர்ந்துள்ளது.

**செம்பட்டி அருகே சூறாவளிக்காற்று 10 ஆயிரம் வாழை மரங்கள் நாசம்**

செம்பட்டி : செம்பட்டி அருகே மல்லையாபுரத்தில் வீசிய சூறாவளி காற்றில், 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வாழை மரங்கள் சாய்ந்தன.
திண்டுக்கல் மாவட்டம்,செம்பட்டி அருகே ஆத்தூர், மல்லையாபுரம், பாறைப்பட்டி, சித்தையன்கோட்டை பகுதிகளில் இந்தாண்டு சுமார் 30 ஏக்கரில் வாழை சாகுபடி செய்யப்பட்டுள்ளது. தற்போது அவை பலன்தரும் நிலையில்

உள்ளன.நேற்று முன்தினம் இப்பகுதியில் பலத்த சூறாவளி காற்று வீசியது. இதில் 10 ஆயிரத்திற்கு மேற்பட்ட வாழைகள் சாய்ந்தன.
மல்லையாபுரத்தைச் சேர்ந்த தங்கராஜ் கூறுகையில், "ஏக்கருக்கு இரண்டாயிரத்து 500 மரங்கள் வீதம் ஐந்து ஏக்கர் வாழை சாகுபடி செய்திருந்தேன். பராமரிப்பிற்கென மரத்திற்கு ஐம்பது ரூபாய் வரை செலவிட்டுள்ளேன். அடுத்த 20 நாட்களில் பலன் தரும் நிலையில், வாழை மரங்கள் குலை தள்ளிய நிலையில் இருந்தன. கடந்தாண்டு மரம் ஒன்றிற்கு 150 முதல் 280 ரூபாய் வரை கிடைத்தது. தற்போது இரண்டு லட்சம் ரூபாய்க்கு மேல் வருவாய் கிடைக்கும் நிலை இருந்தது.சூறாவளி காற்றால், அனைத்தும் சாய்ந்து விட்டன.இதற்கு இழப்பீடு வழங்க அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்றார்.
வாழை மரங்கள் மட்டுமின்றி ஏராளமான தென்னை மரங்களும்,காற்றில் விழுந்துள்ளன.

**விதைப்பண்ணைக்கு கூடுதல் நிதி: குளித்தலை எம்.எல்.ஏ., கோரிக்கை**

குளித்தலை: குளித்தலை தொகுதியில் உள்ள பல கோரிக்கை நிறைவேற்ற அமைச்சர்களுக்கு எம்.எல்.ஏ., மாணிக்கம் கோரிக்கை மனு அளித்துள்ளார்.

குளித்தலை எம்.எல்.ஏ., மாணிக்கம் கோரிக்கை மனுவில் உள்ளதாவது: குளித்தலை சட்டசபை தொகுதிக்கு உட்பட்ட இனுங்கூர் பஞ்சாயத்து விதை நெல் உற்பத்தி செய்யும் அரசு விதைப்பண்ணை 200 ஏக்கர் பரப்பளவு கொண்டது. இப்பண்ணையில் தற்போது பத்து ஏக்கர் பரப்பளவில் மட்டும் விதை நெல் உற்பத்தி செய்யப்படுகிறது. விதைப்பண்ணைக்கு அதிக நிதியை ஒதுக்கி பண்ணையை விரிவாக்கம் செய்து விதை நெல் உற்பத்தியை அதிகரிக்க வேண்டும். விவசாயிகள் அதிகளவு மின்சாரம் பயன்படுத்தி வருவதால் குளித்தலை பகுதியில் 110 கிலோ வாட் திறன் கொண்ட துணை மின் நிலையம் அமைக்க வேண்டும். குளித்தலைக்கு அரசு பஸ் பணிமனை அமைக்க வேண்டும். நங்கவரம் டவுன் பஞ்சாயத்து நங்கம்குறிச்சி காட்டுவாரியில் பாலம் கட்டுதல், புறநகரில் பஸ் ஸ்டாண்ட் ஏற்படுத்த நகராட்சி நிர்வாகம் மேற்கொள்ள வேண்டும். தோகமலையில் துணை சார்பதிவாளர் அலுவலகம் அமைக்க வேண்டும். அய்யர்மலையில் ரோப்கார் வசதி செய்ய வேண்டும். முதலைப்பட்டி பஞ்சாயத்தில் அரசு தோட்டக்கலை பண்ணையில் அரசு தோட்டக்கலைபயிற்சி மையம் அமைக்க வேண்டும். குளித்தலை அரசு பொதுமருத்துவமனையில் பணியாற்றும் பணியாளர்கள், நர்ஸ், குடியிருப்பு வசதிகள் ஏற்படுத்தி கொடுக்க வேண்டும். இனுங்கூர் அரசு உயர்நிலைப்பள்ளியை மே ல்நிலைப்பள்ளியாக தரம் உய ர்த்த வேண்டும். ஆர்.டி. மலை அரசு மேல்நிலைப்பள்ளியில் பிற்படுத்தப்பட்டோர் விடுதி அமைக்க வேண்டும். இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

**பால் உற்பத்தியாளர் சங்கம் நாளை பொதுக்குழு கூட்டம்**

நாமக்கல்: 'தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் நலச்சங்க மாநில பொதுக்குழு கூட்டம், நாளை (23ம் தேதி) சேலத்தில் நடக்கிறது' என, சங்க பொதுச்செயலாளர் ராஜேந்திரன் தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கை: தீவனங்கள் விலை உயர்வால் பால் உற்பத்தி செலவு உயர்ந்துள்ளதை கருத்தில் கொண்டு, பால் கொள்முதல் விலையை லிட்டருக்கு 5 ரூபாய் உயர்த்த வேண்டும். கடும் வறட்சி காரணமாக, பால் உற்பத்தியாளர்கள் மாடுகளை விற்பனை செய்கின்றனர். அதை தடுக்க, வறட்சி கால விலையாக லிட்டருக்கு 2 ரூபாய் ஒதுக்கீடு செய்து தமிழக அரசுவழங்க வேண்டும். தமிழக அரசுடன் நலச்சங்கம் மூன்று முறை பேச்சுவார்த்தை நடத்தியுள்ளது. பால் விலை உயர்வு தவிர இதர கோரிக்கைகள் நிறைவேற்றப்படவில்லை. நிலுவையில் உள்ள கோரிக்கைகளை நிறைவேற்ற வலியுறுத்தி, சேலம் தெய்வீகம் திருமண மண்டபத்தில் நாளை (23ம் தேதி) மாநில பொதுக்குழு கூட்டம் நடக்கிறது. கூட்டத்தில் பால் உற்பத்தியாளர்கள் அனைவரும் பங்கேற்க வேண்டும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**வறட்சியால் கால்நடை விற்பனை அதிகரிப்பு!: தீவன தட்டுப்பாடு எதிரொலி**

நாமக்கல்: போதிய மழை பொழிவு இல்லாததால், கடும் வறட்சி ஏற்பட்டு மாவட்டத்துக்கு உட்பட்ட பகுதியில் விவசாயத்தொழில் முடங்கியுள்ளது. தீவன பற்றாக்குறை, தீவனம் விலை உயர்வு இவற்றை சமாளிக்க முடியாத விவசாயிகள் கால்நடைகளை கிடைத்த விலைக்கு விற்பனை செய்யும் பரிதாப நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

நாமக்கல் மாவட்டத்தில் விவசாயம் மற்றும் கால்நடை வளர்ப்பு பிரதான தொழிலாளாக மேற்கொள்ளப்படுகிறது. சில ஆண்டுகளாக பருவமழை பொழிவு குறைந்து கொண்டே வருகிறது. அதனால், விவசாயத்துக்கு முக்கிய நீர் ஆதரமாக விளங்கிய ஆறு, ஏரி, குளம், விவசாய கிணறுகள் போன்ற நீர் நிலைகள் வறண்டு வானம் காட்சியளிக்கின்றன. மாவட்டத்துக்கு உட்பட்ட பகுதியில் பலர் விவசாய தொழிலை கைவிட்டு, மாற்றுத்தொழிலை நாடத்துவங்கியுள்ளனர். பெரும்பாலான விளை நிலங்கள் 'விலை'நிலங்களாக மாறி வருகின்றன. குறிப்பாக சேலம்-நாமக்கல், நாமக்கல்-ப.வேலூர் செல்லும் நெடுஞ்சாலையை ஒட்டி பகுதியில் பத்து ஆண்டுக்கு முன் விவசாயம் செழித்தோங்கி காணப்பட்டது. சாலையின் இருபுறங்களிலும் கண்ணுக்கெட்டிய தூரம் வரை விளை நிலங்கள் நிறைந்திருந்தன. தற்போது, விளைநிலங்களை காண்பதே அரிதாகி வருகிறது. விளை நிலங்கள் சுருங்குவதால் உணவு பொருட்களின் உற்பத்தியும் வெகுவாக குறைய துவங்கியுள்ளது. அதன் காரணமாக காய்கறிகளின் விலை உயர்ந்து கொண்டே செல்கிறது.

இந்த விலையேற்றம் மக்களை கடுமையாக பாதிக்கிறது. தற்போது நிலவும் கடும் வறட்சியால் பசு, எருமை மாடு போன்ற கால்நடைளை வளர்க்க முடியாத சூழலுக்கு விவசாயிகள் தள்ளப்பட்டுள்ளனர். வைக்கோல், தீவனப்புல் உற்பத்தியும் குறைந்துள்ளது. உற்பத்தி குறைவு காரணமாக அவற்றின் விலை இரு மடங்கு உயர்ந்ததுடன், தட்டுப்பாடும் நிலவுகிறது. கால்நடை தீவன பொருட்களான தவிடு, புண்ணாக்கு போன்றவற்றின் விலையும் கடுமையாக உயர்ந்துள்ளது. இவ்விலையேற்றத்தை சமாளிக்க முடியாத விவசாயிகள் பலர், கால்நடைகளை அடிமாட்டுக்கு விற்பனை செய்யும் பரிதாப நிலை அதிகரித்துள்ளது. அதனால் மாட்டுச்சந்தைகளில் விற்பனைக்கு வரும் பசு, எருமை மாடுகளின் எண்ணிக்கை கணிசமாக உயர்ந்துள்ளது. சில மாதங்களுக்கு முன் 20 லாரியில் மட்டுமே மாடுகள் அனுப்பப்பட்டு வந்தது. தற்போது வாரத்துக்கு 40 லாரிகளில் மாடுகள் வெளிமாநிலங்களுக்கு விற்பனைக்கு அனுப்பட்டு வருகிறது.

இதுகுறித்து நாமக்கல்லை சேர்ந்த விவசாயிகள் சிலர் கூறியதாவது: "எந்த ஆண்டும் இல்லாத அளவிற்கு, தற்போது கடும் வறட்சி நிலவுகிறது. குடிக்கும் தண்ணீருக்கு கூட பற்றாக்குறை ஏற்படும் சூழல் உருவாகியுள்ளது. வறட்சி காரணமாக கால்நடை தீவன உற்பத்தி குறைந்து, அவற்றின் விலை உயர்ந்துள்ளது. விலையேற்றத்தை சமாளிக்க முடியாமல், 20 ஆயிரம் ரூபாய் வரை வாங்கிய உயர் இன மாடுகளை, வியாபாரிகள் கேட்ட விலைக்கு குறைத்து விற்பனை செய்யும் நிலை உருவாகியுள்ளது. மழை பெய்தால் மட்டுமே பிரச்னை தீரும், என்றனர்.

**புதுகை, அரியலூரில் நாளை விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

புதுக்கோட்டை: புதுக்கோட்டை மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் கலெக்டர் அலுவலக கூட்ட அரங்கில் நாளை (23ம் தேதி) காலை 10.30 மணிக்கு நடக்கிறது. மாவட்ட கலெக்டர் சுகந்தி தலைமையில் நடைபெறவுள்ள இக்கூட்டத்தில் அரசுத்துறை அதிகாரிகள் பலர் கலந்துகொண்டு விவசாயிகளின் கோரிக்கைகளுக்கு பதிலளிக்கின்றனர். விவசாயம் தொடர்புடைய கோரிக்கைகளுக்கு தீர்வுகாண விரும்பும் விவசாயிகள் கூட்டத்தில் பங்கேற்கலாம்.* அரியலூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர்நாள் கூட்டம், வருகிற 23ம் தேதி காலை 11 மணிக்கு, அரியலூர் தாலுகா அலுவலக கூட்ட அரங்கத்தில் நடக்கிறது. இக்கூட்டத்தில் வேளாண்மை நீர்பாசனம், வேளாண்

கடனுதவிகள், வேளாண் இடுபொருட்கள் வழங்கல், வேளாண்மை இயந்திரங்கள் மற்றும் வேளாண்மை மேம்பாட்டிற்கான முறையீடுகள் பற்றி விவாதிக்கப்படும் இக்கூட்டத்தில், விவசாயிகள் கலந்து கொண்டு, தங்களின் குறைகளை தெரிவிக்கலாம். இவ்வாறு அரியலூர் கலெக்டர் ஆபிரகாம் வெளியிட்ட அறிக்கையில் கூறியுள்ளார்.

**நாட்டுப்படகு, கரைவலை மீன்பிடிப்பில் மீனவர்கள் : மீன் விலையும் உயர்வு**

ராமேஸ்வரம் : அரசின் 45 நாள் மீன்பிடி தடையால் பக்ஜலசந்தி கடலில் நாட்டுப்படகு, கரைவலை மீன்பிடிப்பில் பாரம்பரிய மீனவர்கள் ஆர்வத்துடன் ஈடுபட்டு வருகின்றனர்.
தமிழக கடலில் மீன்வளப் பெருக்கத்திற்காக ஏப்.15 முதல் மே 30 வரை 45 நாட்கள் விசைப்படகுகள் மீன்பிடிக்க அரசு தடை விதித்துள்ளது. இதனால் ,தமிழகம் முழுவதும் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட படகுகள் மீன்பிடிக்க செல்லாமல் கடந்த ஒரு வாரமாக கரையில் நிறுத்தப்பட்டுள்ளன. மீன்பிடி தடையால் இரண்டு லட்சத்திற்கும் மேற்பட்ட மீனவர்கள் தொழில் இழந்துள்ளனர். விசைப்படகுகள் மீன்பிடிக்க செல்லாததால், இறால் மீன் ஏற்றுமதி இல்லாத நிலையில் அரசுக்கு கோடிக்கணக்கில் அன்னியசெலாவனி இழப்பு ஏற்பட்டுள்ளது. மீன்விலையும் பன்மடங்கு அதிகரித்துள்ளது. ராமேஸ்வரம் பகுதியில் லேத் பட்டறைகள், மீன்கம்பெனிகள் என அனைத்தும் அடைக்கப்பட்டுள்ள நிலையில் ,கடற்கரையே ஆள்நடமாட்டமின்றி வெறிச்சோடி காணப்படுகிறது. ஆனால் ,நாட்டுப்படகு மீனவர்களுக்கு இத்தடை பொருந்தாது என்பதால் ,ராமேஸ்வரம் மற்றும் கடலோர பகுதியை சேர்ந்த நாட்டுப்படகு மீனவர்கள், வழக்கம்போல் பாக்ஜலசந்தி கடலில் மீன்பிடித்து திரும்புகின்றனர். தனுஷ்கோடி, சேரான்கோட்டை கடலில் கரை வலை மீன்பிடிப்பிலும் மீனவர்கள் ஈடுபட்டு வருகின்றனர். இதன் மூலம் ஓரளவு மீன்கள் விற்பனைக்கு வந்தாலும், அன்றாட தேவையை தீர்த்து வைக்கும் அளவிற்கு மீன்வரத்து இல்லாததால், மீன் விலையும் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. முன்பு கிலோ 150க்கு விற்ற பாறை மீன் தற்போது 200 ரூபாய்க்கும், 100க்கு விற்ற விளை மீன் 180 ,200க்கு விற்ற சீலா மீன் (நெய்)250 , 80க்கு விற்ற முரல்120 , 30க்கு விற்ற காரல் 60,120க்கு விற்ற கணவாய் 200 க்கும் விற்பனை செய்யப்படுகிறது.இதனால் அசைவ பிரியர்கள் பாதிக்கப்பட்டுள்ளதோடு,இவர்கள் கருவாடு,சிக்கன் என மாறி உள்ளனர்.

**கனகாம்பரம் பூ கிலோ ரூ.200: விளைச்சல் குறைவால் விலை உயர்வு**

ஆத்தூர்: ஆத்தூர் சுற்றுவட்டார பகுதிகளில் விளைச்சல் குறைந்ததால், கனகாம்பரம் பூ கிலோ 200 ரூபாய்க்கு விற்கிறது.

மணம் இல்லாவிட்டாலும் கண்களை கவரும் நிறத்தில் காணப்படுவதால் பெண்கள் மத்தியில் எப்போதும் கனகாம்பரம் பூக்களுக்கு வரவேற்பு இருக்கிறது. சித்திரை, வைகாசி மாதங்களில் கோவில் திருவிழா, திருமணம் போன்ற நிகழ்ச்சிகள் இருப்பதால் பூக்கள் தேவை அதிகளவில் இருக்கும். இந்தாண்டு கடும் வறட்சி, வெயில் தாக்கம் காரணமாக பூக்களின் வளர்ச்சி மற்றும் விளைச்சலில் பாதிப்பு ஏற்பட்டுள்ளதால் ஆத்தூர், சேலம் பூ மார்க்கெட்டுக்கு குண்டுமல்லி, கனகாம்பரம், காக்கட்டான் போன்ற பூக்கள் வரத்து குறைந்துள்ளது.ஆத்தூர், தலைவாசல், மணிவிழுந்தான், பட்டுத்துறை, ஊனத்தூர், வீரகனூர், கெங்கவல்லி, மல்லியக்கரை, நரசிங்கபுரம், பெத்தநாயக்கன்பாளையம், ஏத்தாப்பூர் போன்ற பகுதிகளில் கனகாம்பரம் செடிகள் நடவு செய்யப்பட்டுள்ளன. அறுவடையாகும் கனகாம்பரம், குண்டு மல்லி போன்ற பூக்கள் சேலம், நாமக்கல், கள்ளக்குறிச்சி, விழுப்புரம், பெரம்பலூர் போன்ற பகுதிகளுக்கு விற்பனைக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. இந்தாண்டு பருவ மழையில்லாததால் விவசாய கிணறுகளில் நீர் மட்டம் குறைந்துள்ளது. அதனால் பூ பயிர் செய்துள்ள விளைநிலத்தில் சொட்டு நீர் பாசன முறையில் விவசாயிகள் தண்ணீர் பாய்ச்சுகின்றனர். கோடை வெயில் அனல்காற்றாக வீசுவதாலும், பாசன வசதி இல்லாததாலும் கனகாம்பரம் பூக்கள் சிறிதாக காணப்படுகின்றன. பூக்களின் விளைச்சலும் குறைந்துள்ளதோடு, செடிகளும் காய்ந்து கருகி வருகின்றன. விளைச்சல் குறைந்து வருவதால் கிலோ 200 முதல் 250 ரூபாய் வரை விற்கப்படுகிறது.

ஆத்தூர் கனகாம்பரம் விவசாயி சாமிக்கண்ணு கூறுகையில், "கனகாம்பரம் பூ செடிகள் நடவு செய்த நான்கு மாதத்தில் பூக்கள் அறுவடை செய்யப்படும். இந்தாண்டு மழையில்லாமல் வறட்சி ஏற்பட்டுள்ளதால் விவசாய கிணறுகளில் தண்ணீர் இல்லை. குறைந்த தண்ணீரையும் சொட்டு நீர் முறையில் பூ செடிகளுக்கு விடுகிறோம். வறட்சி, கொளுத்தும் வெயில் காரணமாக பூ செடிகள் காய்ந்து கருகி வருகின்றன. "பூக்கள் உற்பத்தி குறைவாக இருப்பதால் விலை கிலோவுக்கு 200 ரூபாய் உயர்ந்துள்ளது. விலை உயர்ந்தாலும் பூக்கள் உற்பத்தி இல்லை, வளரும் பூக்களும் சிறிதாக இருக்கிறது. மழை பெய்தால் மட்டுமே பூக்கள் வாசமாகவும், விளைச்சல் அதிகம் இருக்கும்," என்றார்.

**புதூர் விவசாயிகளுக்கு தோட்டகலை மூலம் மானிய விலையில் சொட்டுநீர் பாசன கருவிகள்**

தூத்துக்குடி : தோட்டக்கலை துறை மூலம் புதூர் பகுதி விவசாயிகளுக்கு 65 சதவீத மானியத்தில் சொட்டுநீர் பாசன கருவிகள் வழங்கப்படும் என்று தோட்டக்கலை தெரிவித்துள்ளது.
இது குறித்து புதூர் தோட்டக்கலை உதவி இயக்குநர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது; புதூர் வட்டாரத்தில் கிணற்றுப்பாசனம் மூலம் சாகுபடி செய்யும் விவசாயிகள் தங்கள் நிலத்தில் சொட்டு நீர்பாசனம் அமைக்க இதுதக்க தருணம் ஆகும். இறவை காய்கறிப்பயிர்கள், பழவகை மரங்கள், மலர்ப்பயிர்கள் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு அரசு தோட்டக்கலைத்துறை மூலம் 65 சதவீத மானியத்தில் சொட்டு நீர்பாசன உபகரணங்கள் வழங்கப்படுகிறது.
இந்த வாய்ப்பினை பயன்படுத்தி வரும் பருவ சாகுபடிக்கு முன்பு சொட்டு நீர்பாசனம் அமைக்க விவசாயிகள் முன்வரவேண்டும். சொட்டுநீர்பாசனம் அமைப்பதன் காரணமாக பயிருக்கு செலவிடப்படும் தண்ணீரின் அளவு பெருமளவு மிச்சப்படுகிறது. இதன் மூலம் அதிக பரப்பில் சாகுபடி செய்யலாம். பயிரில் களைகளின் பாதிப்பு வெகுவாக குறையும். நீரில் கரையும் உரங்களை தண்ணீரில் கரைத்து சொட்டு நீர் பாசனகருவி மூலம் பயிர்களுக்கு அளிக்கலாம். இதனால் உரச் செலவு குறைவதுடன், உரத்தின் பலன் பயிர்களுக்கு மட்டும் சென்று சேரும். இவ்வாறு பல வகைகளிலும் பயன் அளிக்கும் சொட்டுநீர்ப்பாசன முறையை அனைத்து வகை பயிர்களுக்கும் பயன்படுத்தலாம். காய்கறிப்பயிர்களுக்கு சொட்டுநீர் பாசனத்தை மேட்டுபாத்தி அமைத்து சாகுபடி செய்வதன் மூலம் எளிதாக பயன்படுத்தலாம்.
சொட்டு நீர்பாசன கருவிகள் தொடர்பான விபரங்களுக்கு புதூர் தோட்டக்கலைத் துறை உதவி இயக்குநர் அலுவலகத்தை தொடர்பு கொண்டு விவசாயிகள் பயன்பெறலாம் என்று அவர் தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

**நீர் கிடைக்காத விரக்தியில் விவசாயி தற்கொலை**

அரக்கோணம்:நெமிலி அடுத்த காவேரிபுரத்தை சேர்ந்தவர் ரத்தினம் (43). விவசாயி. இவரது மனைவி மோகனா (37). இவர்களுக்கு ஒரு மகன், 2 மகள்கள் உள்ளனர். ரத்தினத்துக்கு சொந்தமான 5 ஏக்கர் நிலம் விஜயபுரத்தில் உள்ளது. இந்நிலையில் கடந்த 18ம் தேதி நிலத்தில் 300 அடிக்கு போர்வெல் போட்டார். தண்ணீர் வரவில்லை. அடுத்ததாக வேறொரு இடத்தில் புதிதாக 450 அடிக்கு போர்வெல் போட்டார். அதிலும் தண்ணீர் வரவில்லை.

இதனால் மனமுடைந்த ரத்தினம் 18ம் தேதி, கொட்டகையில் வைத்திருந்த பூச்சி மருந்தை குடித்து மயங்கி விழுந்தார். அந்த வழியாக சென்றவர்கள் அவரை மீட்டு காஞ்சிபுரத்தில் உள்ள தனியார் மருத்துவமனையில் சேர்த்தனர். நேற்று அவர் இறந்தார்.இது குறித்து நெமிலி சப்-இன்ஸ்பெக்டர் செல்வம் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார்.

**121 மில்லியன் வெள்ளாடுகள் வளர்ப்பு : கால்நடைத்துறை தலைவர் தகவல்**

திருப்பூர் : வெள்ளாடு வளர்ப்பு குறித்த சிறப்பு முகாம், திருப்பூர் கால்நடை பல்கலை ஆராய்ச்சி மையத்தில் நேற்று நடந்தது.

கால்நடைத்துறை தலைவர் செல்வராஜ் தலைமை வகித்து, பேசியதாவது: நம் நாட்டில் 121 மில்லியன் வெள்ளாடுகள் வளர்க்கப்படுகின்றன. தமிழகத்தில் வெள்ளாடுகள் அதிக அளவில் வளர்க்கப்படுகின்றன. உதாரணாமாக, திருநெல்வேலியில் கன்னி வகை ஆடுகள்; சேலத்தில் கருப்பு ஆடு; நீலகிரியில் குர்சர்ஸ் வகை ஆடுகள் வளர்க்கப்படுகின்றன. இவைதவிர, மற்ற ஆடு வகைகள் இந்தியாவில் 55 மில்லியன் உள்ளன. சுழற்சி முறையில் ஆடு வளர்ப்பதில், இதுவரை வெள்ளாடுகள் மட்டுமே வழங்கப்பட்டன. தற்போது, கேரள மாநிலத்தை சேர்ந்த தளைச்சேரி இன புதிய ரக ஆடுகள் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. இதுகுறித்து கால்நடை பல்கலை மற்றும் ஆராய்ச்சி குழு மருத்துவர்கள் நாளை (இன்று) கேரளா செல்ல உள்ளனர்.

அவர்கள் கொடுக்கும் அறிக்கைப்படி, தமிழகத்தில் உள்ள தட்பவெட்ப நிலைக்கேற்ப அந்த ஆடுகள் வளர்க்க முடியுமா என்பது பற்றி ஆய்வு நடத்தப்படும். அதன்பின், தளைச்சேரி (மலபாரி) ஆடுகள்  விருப்பமுள்ளவர்களுக்கு சிறப்பு முகாம்களின் மூலம் வழங்கப்படும். வெள்ளாடுகள், பெட்டை ஆட்டின் நறுமணத்தை வைத்தே இனப்பெருக்கம் செய்யும். மலபாரி ரக ஆடுகளுக்கு, எதிர்ப்பு சக்தி அதிகமாக இருக்கும். போடும் குட்டிகள் அதிக எடை கொண்டதாக இருக்கும். இனப்பெருக்கத்துக்கு உதவும்; இவற்றின் பால் சத்தானதாகவும், சுவைமிகுந்ததாகவும் இருக்கும், என்றார்.

**குளச்சலில் நெத்திலி மீன் சீசன்**

ஏப்ரல் 22,2010,00:00  IST



நாகர்கோவில் : கன்னியாகுமரி மாவட்டம் குளச்சலில் நெத்திலி மீன் சீசன் களை கட்ட துவங்கியதை யடுத்து, கேரள மீன் வியாபாரிகள் இங்கு குவிந்துள்ளனர். தற்போது மீன் இனப்பெருக்க காலம் என்பதால் ஆழ்கடல் மீன்பிடிப்புக்கு தடை விதிக்கப் பட்டுள்ளது. இதனால், விசைப்படகுகள் கடலுக்கு செல்லவில்லை. வள்ளம் மற்றும் கட்டுமரத்தில் சென்று மீனவர்கள் மீன் பிடித்து வருகிறனர். தற்போது வலைகளில் பெரிய மீன்கள் எதுவும் சிக்குவதில்லை. குளச்சல் பகுதியில் மீன்பிடிக்கச் சென்ற பெரும்பாலான மீனவர்களுக்கும் நெத்திலி மீன்கள்தான் கிடைக்கின்றன. சிறிய வகையைச் சேர்ந்த இந்த மீன் சாப்பிட மிகவும் ருசியானது. கால்ஷியம் சத்து அதிகம் உள்ளதால் இந்த மீன், குழந்தைகளுக்கு அதிகமாக கொடுக்கப்படும். குளச்சலில் நெத்திலி சீசன் களைகட்டியதால் கேரள வியாபாரிகள் இங்கு குவிந்துள்ளனர்.

**பால் கொள்முதல் விலையை லிட்டருக்கு ரூ.20 ஆக உயர்த்தி தர வேண்டும் முதல்–அமைச்சருக்கு பால் உற்பத்தியாளர் சங்கம் கோரிக்கை**

கோவை, ஏப்.22–
பால் கொள்முதல் விலையை லிட்டருக்கு ரூ.20 ஆக உயர்த்தி தர வேண்டும் என்று கோவை மாவட்ட பால் உற்பத்தியாளர் நலச்சங்கத்தினர் முதல்–அமைச்சருக்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.
இது குறித்து கோவை மாவட்ட பால் உற்பத்தியாளர் நலச்சங்க காப்பாளர் ராஜகோபால் விடுத்துள்ள கோரிக்கையில் கூறப்பட்டு இருப்பதாவது:–
கால்நடை காப்பீடு திட்டம்
கோவை மாவட்டத்துக்கு பால் வழங்கும் உற்பத்தியாளர்களிடம் சுமார் 45 ஆயிரம் கறவை மாடுகள் உள்ளன. கடந்த ஆண்டுகளில் தேசிய கால்நடை காப்பீட்டுத் திட்டத்தில் மத்திய அரசின் 50 சதவீத மானியத்தில் சுமார் 20 ஆயிரம் கறவை மாடுகளுக்கு காப்பீடு செய்யப்பட்டு உள்ளது. மீதம் உள்ள 25 ஆயிரம் மாடுகளுக்கு பிரிமியம் தொகை மத்திய அரசின் 50 சதவீத மானியத்துடனும், மீதம் உள்ள 50 சதவீத தொகையை ஒன்றியமே செலுத்தி கறவை மாடுகள் இலவச காப்பீட்டு திட்டத்தை மாவட்ட ஒன்றியங்களே செயல்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.
கூட்டுறவு சங்கங்களில் உள்ள பால் உற்பத்தியாளர்களின் நலன் கருதி உடனடியாக பசும் பாலின் கொள்முதல் விலையை லிட்டர் ஒன்றுக்கு ரூ.20 ஆகவும், எருமைப்பாலுக்கு லிட்டர் ஒன்றுக்கு ரூ.30 ஆகவும் உயர்த்தி வழங்க வேண்டும்.
கன்று வளர்ப்பு
கிடாரி கன்றுகள் பராமரிக்க கன்று வளர்ப்பு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த திட்டத்தின் கீழ் கோவை மாவட்டத்தில் சுமார் 2 ஆயிரம் கன்றுகளை பராமரிக்க கன்று ஒன்றுக்கு ஆயிரத்து 400 கிலோ அளவுக்கு தீவனம் இலவசமாக வழங்க வேண்டும். சங்கங்களுக்கு பால் வழங்கும் உற்பத்தியாளர்களுக்கு ஒரு கிலோ கலப்பு தீவனத்துக்கு ரூ.2 வரை அரசு மானியம் வழங்க வேண்டும்.
கோவை மாவட்ட பால் உற்பத்தியாளர் ஒன்றியத்தை பொறுத்த மட்டில் கடந்த சில ஆண்டுகளாக மாநிலத்தில் உள்ள அனைத்து பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களை விட கூடுதல் லாபம் ஈட்டி வருகிறது. கடந்த ஆண்டு பால் உற்பத்தி மூலம் ரூ.12 கோடி உபரி தொகை கிடைத்தது. அப்போது சங்கம் மூலம் பால் வழங்கிய பால் உற்பத்தியாளர்களுக்கு லிட்டர் ஒன்றுக்கு 50 காசு கூடுதலாக வழங்கப்பட்டது. இதே போல் இந்த ஆண்டு உபரி தொகையாக ரூ.20 கோடிக்கு மேல் இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த நிலையில் சங்கத்துக்கு பால் வழங்கிய பால் உற்பத்தியாளர்களுக்கு கூடுதலாக லிட்டர் ஒன்றுக்கு ஒரு ருபாய் 50 காசு வழங்க வேண்டும்.
பணி நிரந்தரம்
நீண்ட நாட்களாக கிராம பால் கூட்டுறவு சங்கங்களில் பணியாற்றி வரும் பணியாளர்களுக்கு பணி நிரந்தரமும், ஊதிய உயர்வும் அளிக்க வேண்டும். தரம் மிக்க பாலை உற்பத்தி மற்றும் கொள்முதலை ஊக்கப்படுத்தும் விதமாக பால் உற்பத்தியாளர்களுக்கு லிட்டருக்கு 20 காசும், செயலர் மற்றும் உதவியாளருக்கு லிட்டருக்கு 10 காசும் ஊக்கத்தொகையாக வழங்க வேண்டும். கறவை மாடுகளுக்கு வழங்கும் தீவனம் வெட்டும் எந்திரங்களில் மின் மோட்டார் பொருத்த 75 சதவீத மானியம் வழங்க வேண்டும்.
தினந்தோறும் 1000 லிட்டர் பாலுக்கு மேல் கொள்முதல் செய்யும் சங்கங்களுக்கு நவீன கம்ப்யூட்டர் மற்றும் பிரிண்டரும், செயலர்களுக்கு தக்க பயிற்சியும் வழங்கு திட்டத்தை செயல்படுத்த வேண்டும்.
இவ்வாறு அவர் கூறி உள்ளார்.

**சூறாவளி காற்றால் வாழைகள், தென்னை மரங்கள் சேதம்: பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க வேண்டும் கேரள மாநில தமிழ்பாதுகாப்பு இயக்கம் கோரிக்கை**

கொழிஞ்சாம்பாறை,ஏப்.22–
இயற்கை பேரழிவால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க வேண்டும் என்று கேரள மாநில தமிழ்பாதுகாப்பு இயக்கம் கோரிக்கை விடுத்து உள்ளது.
பலத்த சேதம்
கேரள மாநிலம், பாலக்காடு மாவட்டத்தில் கடந்த வாரம் திடீரென்று சூறாவளி காற்றுடன் கோடை மழை பெய்தது. இதனால் பாலக்காடு மாவட்டத்தில் வடகரபதி, கொழிஞ்சாம்பாறை, சித்தூர் தாலுகா பகுதியில் பயிரிடப்பட்டு இருந்த வாழைகள், தென்னை மரங்கள் ஒடிந்து விழுந்தன.
சூறாவளி காற்று காரணமாக விவசாயிகளுக்கு பல லட்சம் ரூபாய் சேதம் அடைந்தன. மாவட்டம் முழுவதும்

*கணக்கெடுத்தால் பல கோடி ரூபாய் சேதம் அடைந்து இருக்கலாம் என்று கூறப்படுகிறது. விவசாயிகளுக்கு நஷ்ட ஈடு வழங்க வேண்டும் என்று அரசியல் கட்சியினர் கோரிக்கை விடுத்து வருகிறார்கள்.*

*இந்த நிலையில் கேரள மாநில தமிழ் பாதுகாப்பு இயக்க பொதுச்செயலாளர் பேச்சிமுத்து, கேரள முதல்–மந்திரி அச்சுதானந்தனுக்கு ஒரு கோரிக்கை மனு அனுப்பி உள்ளார். அதில் கூறி இருப்பதாவது:–*

*நிவாரணம் வழங்க வேண்டும்*

*பாலக்காடு மாவட்டம், சித்தூர் தாலுகாவில் உள்ள வடகரப்பதி, எருத்தேன்பதி, கொழிஞ்சாம்பாறை, புதுச்சேரி, எலப்புள்ளி ஆகிய பஞ்சாயத்து பகுதிகள் வறட்சி பாதிக்கப்பட்ட பகுதிகள் என்று அரசு அறிவித்து உள்ளது. கடந்த வாரம் ஏற்பட்ட இயற்கை சீற்றத்தால் இப்பகுதி விவசாயிகள் வாழைகள், தென்னை மரங்கள் போன்றவை ஒடிந்து விழுந்தன. இதனால் விவசாயிகளுக்கு பல கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டது. இதே போல் இயற்கை சீற்றத்தால் பாதிக்கப்பட்ட கோட்டயம், ஆலப்புழா விவசாயிகளுக்கு அரசு உதவித்தொகை வழங்கி உள்ளது. ஆனால் பாலக்காடு மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உதவித்தொகை வழங்க அரசு இதுவரை முன் வரவில்லை. எனவே இப்பகுதி மக்களுக்கு உதவித்தொகை வழங்க அரசு முன் வர வேண்டும்.*

*இவ்வாறு அந்த மனுவில் கூறப்பட்டு உள்ளது.*

***நடப்பு பருவத்தின் முதல் ஏழு மாதங்களில் அரசின் நெல் கொள்முதல் 2.60 கோடி டன்னை எட்டியது***



*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு*

*புதுடெல்லி*

*நடப்பு சந்தைப்படுத்துதல் பருவத்தில் (அக்டோபர்–செப்டம்பர்) இதுவரை இந்திய உணவுக் கழகத்தின் நெல் கொள்முதல் 2.60 கோடி டன்னை எட்டியுள்ளது.*

*கரீப் பருவம்*

*சென்ற 2009–ஆம் ஆண்டு கரீஃப் பருவத்தில் (ஜூன்–அக்டோபர்) பருவ மழை பொய்த்ததால் நாடு முழுவதுமாக 300–க்கும் மேற்பட்ட மாவட்டங்கள் வறட்சியின் பிடியில் சிக்கின. இதனால் நெல் மகசூல் குறைந்து போனது. இதனைக் கருத்தில் கொண்டு மத்திய அரசு, நடப்பு 2009–10–ஆம் ஆண்டு சந்தைப்படுத்துதல் பருவத்தில், நெல் கொள்முதல் இலக்கை 2.60 கோடி டன்னாக குறைத்தது.*

*இந்நிலையில், நடப்பு பருவத்தில் சுமார் 7 மாதங்களிலேயே கொள்முதல் இலக்கு எட்டப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. இதனையடுத்து செப்டம்பர் மாதத்துடன் நிறைவடையும் முழு பருவத்தில் நெல் கொள்முதல் 3 கோடி டன்னாக அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.*

*3.37 கோடி டன்*

*கடந்த 2008–09–ஆம் ஆண்டு சந்தைப்படுத்துதல் பருவத்தில், இந்திய உணவுக் கழகமும்,இதர அரசு முகமை அமைப்புகளுமாக மொத்தம் 3.37 கோடி டன் நெல்லை கொள்முதல் செய்திருந்தன என்பது குறிப்பிடத்தக்கது. நடப்பு பருவத்தில் இதுவரை மத்திய அரசின் நெல் கொள்முதல் முதல் கட்ட இலக்கை எட்டிவிட்ட போதிலும், சென்ற பருவத்தின் இதே காலத்துடன் ஒப்பிடும்போது 3 சதவீதம் (2.70 கோடி டன்) குறைவாகும்.*

*மத்திய அரசின் நெல் கொள்முதலில் பஞ்சாப் மாநிலத்தில் பங்களிப்பே மிகவும் அதிகமாகும். இங்கு கொள்முதல் 92.70 லட்சம் டன்னாக உயர்ந்துள்ளது. இது, சென்ற பருவத்தின் இதே காலத்தில் 84.60 லட்சமாக இருந்தது. சத்தீஸ்கர் மாநிலத்தில் நெல் கொள்முதல் இதுவரை 19 சதவீதம் உயர்ந்துள்ளது. அரியானாவிலும் கொள்முதல் 27 சதவீதம் அதிகரித்துள்ளது.*

*ஆந்திர மாநிலம், மத்திய தொகுப்பிற்கு அதிக அளவு நெல்லை அளிக்கிறது. எனினும் தற்போதைய பருவத்தில் இதுவரை கொள்முதல் 23 சதவீதம் குறைந்து 40.20 லட்சம் டன்னாக சரிவடைந்துள்ளது. இது, முந்தைய பருவத்தின் இதே காலத்தில் 51.10 லட்சம் டன்னாக இருந்தது. உத்தரபிரதேச மாநிலத்திலும் கொள்முதல் 27 சதவீதம் சரிந்துள்ளது. ஒரிசா மாநிலத்தில் நெல் கொள்முதல் 3 சதவீதம் குறைந்து, 18.30 லட்சம் டன்னாக சரிவடைந்துள்ளது.*

கொள்முதல் விலை

வேளாண் விளைபொருள் சந்தையில் உருவாகும் ஏற்றத் தாழ்வுகளால் விவசாயிகள் பாதிக்கப்படாமல் இருக்கவும், உற்பத்திப் பொருளுக்கு நல்ல விலை கிடைக்கவும் மத்திய அரசு குறைந்தபட்ச ஆதரவு விலை ஒன்றை நிர்ணயம் செய்து அவர்களிடமிருந்து முக்கிய விளைபொருள்களை கொள்முதல் செய்கிறது. இதுவே கொள்முதல் விலை என்றும் அழைக்கப்படுகிறது. நடப்பு பருவத்திற்கு, சாதாரண ரக நெல் ஒரு குவிண்டாலுக்கு, போனஸ் தொகையுடன், ரூ.1,000–ம், ஏ ரக நெல்லுக்கு ரூ.1,030–ம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

2009–10–ஆம் ஆண்டு வேளாண் பருவத்தில், நாட்டின் அரிசி உற்பத்தி 8.76 கோடி டன்னாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இது, கடந்த 2008–09–ஆம் ஆண்டில் 9.92 கோடி டன்னாக இருந்தது.

## பூச்சி கொல்லி மருந்துகள் ஏற்றுமதி இரு மடங்கு உயர்வு



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு

புதுடெல்லி

கடந்த 2008–09–ஆம் நிதி ஆண்டில், நம் நாட்டிலிருந்து ரூ.8,978.15 கோடி மதிப்பிற்கான பூச்சி கொல்லி மருந்துகள் ஏற்றுமதி ஆகியுள்ளன. இது, இதற்கும் முந்தைய 2007–08–ஆம் நிதி ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ஏற்றுமதியை விட இரண்டு மடங்கு (ரூ.4,841.14 கோடி) அதிகமாகும்.

சென்ற 2008–09–ஆம் நிதி ஆண்டில், நம் நாட்டிலிருந்து 1,84,737 டன் பூச்சி கொல்லி மருந்துகள் ஏற்றுமதியாகி உள்ளது என மத்திய வேளாண் துறைக்கான ராஜாங்க அமைச்சர் ஏ.வி.தாமஸ் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார். கடந்த 2007–08–அம் ஆண்டில், மேற்கொள்ளப்பட்ட ஏற்றுமதி 96,268 டன்னாக இருந்தது. கடந்த 2006–07–ஆம் ஆண்டில் 1,08,092 டன் பூச்சி கொல்லி மருந்துகள் ஏற்றுமதி ஆனது. இதன் மதிப்பு ரூ.3,089.48 கோடி என அமைச்சர் மேலும் கூறினார்.



# வேளாண்மை செய்திகள்

# முந்திரியில் புதிய வீரிய ஒட்டு ரகம் அறிமுகம்



'தரிசு நிலத்தின் தங்கம்' என்று அழைக்கப்படும் முந்திரி, நம் நாட்டில் பல ஆண்டுகளாக பயிரிடப்பட்டு வருகிறது. அடைமொழிக்கு ஏற்ப தரிசு நிலங்களில் நன்றாக வளர்ச்சி அடையும் தன்மை கொண்டது முந்திரி. மற்ற பயிர்களின் விளைச்சலை போல ஆட்கள் கூலி, பராமரிப்பு செலவுகள் என்பது முந்திரியில் கிடையாது. இதனால்தான் விவசாயிகள் லாபகரமான பயிராக முந்திரியை பயிரிட்டு வருகிறார்கள்.

## முந்திரி சாகுபடி

நாட்டின் ஏற்றுமதி வணிகத்தில் முக்கிய பங்கு வகிக்கும் முந்திரி வருடத்துக்கு ரூ.2 ஆயிரத்து 700 கோடி அன்னிய செலாவணியை பெற்று தருகிறது. நம் நாட்டுக்கு போட்டியாக பிரேசில், வியட்நாம், டான்சானியா, ஆஸ்திரேலியா ஆகிய நாடுகள் களமிறங்கியுள்ளன.

1995–க்கு பின்னர் முந்திரி சாகுபடியை ஆரம்பித்த வியட்நாம் 10 ஆண்டுகளில் உற்பத்தியை 3 மடங்காக உயர்த்தியுள்ளது. உற்பத்தி திறனும் ஹெக்டேருக்கு 2500 கிலோவாக அதிகரித்து உள்ளது. நல்ல வளமான விளை நிலங்கள் தேர்வு, அதிக பரப்பளவில் சாகுபடி, நிலத்திற்கு ஏற்ற ரகங்களை போன்றவையே இதற்கு காரணம். நம்நாட்டில் மராட்டிய மாநிலத்தில், அதிக அளவாக ஹெக்டேருக்கு 1500 கிலோ முந்திரி கொட்டைகள் உற்பத்தியாகி உள்ளன. வீரிய ஒட்டுரகம், அதிக விளைச்சல் ரகங்களை பயிரிட்டதே காரணம்.

## நெருக்கமான நடவு முறைகள்

தமிழகத்தை பொறுத்தவரை ஹெக்டேருக்கு 760 கிலோ மட்டுமே உற்பத்தியாகிறது. அதிக பரப்பளவு, காய்ப்பு திறனற்ற வயதான மரங்கள், குறைவான பயிர் எண்ணிக்கை போன்றவையே உற்பத்தி குறைவுக்கு முக்கிய காரணம் ஆகும். எனவே மாநிலத்தில் முந்திரி சாகுபடியை அதிகரிக்க மகசூல் திறன் அதிகம் கொண்ட புதிய ரகங்களை பயிரிட வேண்டியது அவசியம். முந்திரி பயிர் எண்ணிக்கையை அதிகரிக்க நெருக்கமான நடவு முறைகளை பின்பற்றினால் உற்பத்தி திறனை அதிகரிக்கலாம். தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தின் ஓர் அங்கமான மண்டல ஆராய்ச்சி நிலையம் விருத்தாச்சலத்தில் அமைந்துள்ளது.

இங்கு பல ஆண்டுகளாக மேற்கொள்ளப்பட்டு வந்த முந்திரியில் ஒட்டுரக ஆராய்ச்சியின் விளைவாக பல்வேறு நாட்டு ரகங்களும், வீரிய ஒட்டு ரகங்களும் பராமரிக்கப்பட்டு, அதிக விளைச்சல், நெருக்கமான நடவு, அதிகம் படராத தன்மை கொண்ட கிளைகள் மற்றும் ஏற்றுமதி தரம் வாய்ந்த பருப்புகள் பற்றி ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## விளைச்சல் அதிகரிப்பு

இதுவரை வி.ஆர்.ஐ.1, வி.ஆர்.ஐ.2, வி.ஆர்.ஐ.3, வி.ஆர்.ஐ.4, ஆகிய ரகங்கள் வெளியிடப்பட்டு உள்ளன. வி.ஆர்.ஐ.3 ரகம் விவசாயிகளிடம் நல்ல வரவேற்பை பெற்று உள்ளது. ஏற்றுமதியாளர்களிடமும், பதப்படுத்தும் தொழிற்சாலைகளிலும் இதற்கு தனி வரவேற்பை பெற்றுள்ளது. இதனால் தமிழகத்தில் தற்போது 60 சதவீத முந்திரி பயிர்கள் நல்ல ரகங்களாக மாற்றி, பயிரிடப்பட்டு வருகிறது. ஒரே ரகத்தை நம்பி இருந்தால், பூச்சி மற்றும் நோய் தாக்குதல் ரகம் வாரியாக நோய் பரவினால் ஒட்டுமொத்த வீணாக வாய்ப்பு உள்ளது.

வீரிய ஒட்டு ரகமான எச்.1 தமிழ்நாட்டில் அனைத்து பகுதிகளிலும் சாகுபடி செய்ய ஏற்ற ரகமாகும். இது உயர் விளைச்சலும் ஏற்றுமதி தரமும் வாய்ந்தது. செம்மண் மற்றும் கடலோர பகுதிகளில் சாகுபடி செய்ய ஏற்றது. இதுபோன்ற சிறந்த ரகங்களின் ஒட்டு கன்றுகளை நட்டு விளைச்சலை அதிகரித்து விவசாயிகள் லாபம் பெறலாம்.

**–தகவல்: மாரிமுத்து, அனீசா ராணி, ஜீவா, மண்டல ஆராய்ச்சி நிலையம், விருதாச்சலம்.**

# அறுவடைக்கு தயாராகும் மஞ்சளின் தரத்தை அதிகரிப்பது எப்படி?

## வேளாண்மை உதவி இயக்குனர் விளக்கம்



கோவை, ஏப்.22–

விவசாயிகள் தாங்கள் பயிரிட்டு அறுவடைக்கு தயாராக இருக்கும் மஞ்சளின் தரத்தை அதிகரிப்பது எப்படி என்று வேளாண்மை உதவி இயக்குனர் விளக்கம் அளித்து உள்ளார்.

இது குறித்து கோவை மாவட்ட வேளாண்மை உதவி இயக்குனர் செல்லதுரை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டிருப்பதாவது:–

### ஈரப்பதம்

கோவை மாவட்டத்தின் சுற்றுவட்டார பகுதிகளில் ஏராளமான விவசாயிகள் மஞ்சள் பயிரிட்டு உள்ளனர். அறுவடைக்கு தயார் நிலையில் உள்ள மஞ்சள் பயிரை அறுவடை செய்யும் முன்னர் அதன் தண்டு பகுதியை 10 நாட்களுக்கு முன்பாக தரையில் மேல் மட்டத்தில் இருந்து 10 சென்டிமீட்டர் இடைவெளி விட்டு அறுத்து விட வேண்டும். அதன் காரணமாக மஞ்சளின் ஈரப்பதம் குறைவதுடன் விரைவில் முதிர்ச்சி அடையும்.

இந்த மஞ்சள் கிழங்கை கொத்து கொண்டு கொத்தி எடுக்க வேண்டும். அவ்வாறு எடுக்கப்படும் ஈர மஞ்சளில் 5–ல் ஒரு பகுதி பதப்படுத்திய மஞ்சள் கிடைக்கும். ஈரத்தன்மை கொண்ட மஞ்சளை சுத்தமான நீரில் கழுவி அதன் பின்னர் வேக வைக்க வேண்டும். மஞ்சள் வெந்து விட்டது என்பதை அறிய வேகும் போது வரும் வாசனையை கொண்டு அறியலாம். உடனடியாக வேக வைப்பதை நிறுத்திவிட்டு கையில் எடுத்து மஞ்சளை அறுத்து வெந்து விட்டதா என்பதை கண்டறிய வேண்டும். அதன் பின்னர் மஞ்சள் வேக வைப்பதை நிறுத்த வேண்டும். அவ்வாறு வேக வைக்கும் மஞ்சள் சரியாக வேகாவிட்டாலும் காயவைக்கும் போது மஞ்சள் உடைந்து சிறு துண்டுகளாக ஆகிவிடும். இவ்வாறு வேக வைத்த மஞ்சளை வெயில் படுமாறு நன்கு பரப்பி 15 நாட்கள் வரை காய வைக்க வேண்டும்.

### பதப்படுத்தப்பட்ட மஞ்சள்

காயவைக்கப்பட்ட மஞ்சளில் சிறு சிறு வேர்களும், செதில்களும் இருக்கும். அவற்றை உடனடியாக சுத்தப்படுத்த வேண்டும். சுத்தம் செய்யப்பட்ட மஞ்சளுக்கு மெருகேற்றுவது மிகவும் அவசியம். இதற்காக மெருகேற்றும் கருவியை கொண்டோ அல்லது கூடைகளை கொண்டே மெருகேற்றலாம். இதே போல் மஞ்சளுக்கு நிறமேற்றுவதும் அவசியம். 100 கிலோ மஞ்சளை நிறமேற்ற 40 கிராம் படிகாரம், மஞ்சள் தூள் 2 கிலோ, ஆமணக்கு எண்ணெய் 140 கிராம், சோடியம்பை சல்பேட் 30 கிராம் மற்றும் ஹைட்ரோகுளோரிக் அமிலம் 30 மில்லி சேர்த்து தயாரிக்கப்பட்ட கரைசலை கொண்டு நிறம் ஏற்றலாம். இதே போல் மஞ்சள் பொடியுடன் ஆல்கஹால் கரைசலை சேர்த்தும் நிறம் ஏற்றலாம்.

இவ்வாறு பதப்படுத்தப்பட்ட மஞ்சளை ஒழுங்குமுறை விற்பனை கூடங்களுக்கு சென்று அன்றைய விலை நிலவரம் அறிந்து கூடுதல் விலைக்கு விற்று பயன்பெறலாம்.

இவ்வாறு வேளாண்மை உதவி இயக்குனர் செல்லதுரை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டு உள்ளது.